ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1991/12 - 2016 නොවැම්බර් මස 01 වැනි අඟහරුවාදා - 2016.11.01

1991/12 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 01 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: அனு/3/5/3/11/1/10.

காணி அமைச்சின் தொடர்பு இல.: 4/3/9/2013/WS/366.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக் கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்ட வாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

அனுராதபுர மாவட்டத்தில் மதவாச்சி பிரதேச செயலாளர் பிரிவில் இல. 55, எதாகட கிராம அலுவலர் பிரிவில் உள்ள எதாகட கிராமத்தில் அமைந்துள்ள 'எதாகடலந்த கெலே' எனும் பெயரினை உடைய காணியானது, அனுராதபுரம் மாவட்ட நில அளவையாளர் நாயகத்தினால் நில அளவை செய்யப்பட்ட இறுதியான கிராம வரைபட இலக்கம் 627 இல் காட்டப்பட்டுள்ள காணித்துண்டு இலக்கம் 149 ஆனது 0.4047 ஹெக்டயார் விஸ்தீரண முள்ளதும் கீழே தரப்பட்டுள்ளவாறு எல்லைகளையும் கொண்டுள்ளது.

**1. துண்டு இலக்கம் 149 - காணியின் பெயர்: எத்தாகடலந்தகெலே; உரிமை கோருபவர்: கண்டுபிடிக்கப் படவில்லை; விஸ்தீரணம்: 0.4047 ஹெக்டயார்.**

வடக்கு: காணித்துண்டு இலக்கங்கள் 150, 290 மற்றும் 148; கிழக்கு: காணித்துண்டு இலக்கங்கள் 148 மற்றும் 147; தெற்கு: காணித்துண்டு இலக்கங்கள் 147 மற்றும் 150; மேற்கு: காணித்துண்டு இலக்கம் 150.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகார மளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2016 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 16 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு, மதவாச்சி பிரதேச செயலகத்தில் என்முன்பாக தோன்றும் படியும்,

மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும், 2016 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 16 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படு கின்றனர்.

டீ. எம். சாந்த தசநாயக்க,
பிரதேச செயலாளர்,
மதவாச்சி.

பிரதேச செயலகம்,
மதவாச்சி,
2016, ஒற்றோபர் 21.

11 - 752